**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 234 /2016**

**Deposition of P.W. 4**

**Name** : திருமதி. லதா

**S/o, D/o, W/o** :

**Village** :

**Taluk** :

**Calling** :

**Age** :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of**

**Dated:20.11.2024**

**Accused Present**

முதல் விசாரணை–

நான் தற்சமயம் நாகர்கோவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அலுவலக உதவியாராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் 13.09.2012ம் தேதி வேளிமலை கிராம உதவியாளராக வேலை பார்த்து வந்தேன். தாசில்தார், அளவையர், கிராம நிர்வாக அதிகாரி மற்றும் நானும் கொற்றிக்கோடு சோழபுரம் பக்கத்தில் சர்வே எண்.3/4பி–யில் உள்ள கல்குவாரியை பார்க்க போனாம். பாறை உடைத்ததாக புகார் வந்தது. நான் மேற்படி நபர்களுடன் போனேன். அவர்கள் தான் அளந்து பார்வையிட்டார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

புகார் தாசில்தாருக்கு வந்தது. கல்குவாரி அஜய்ராஜ் மனைவி சிநேகா பெயரில் இருந்தது. சிநேகா பெயருக்கு முன்னர் அவரது கணவர் பெயரில் இருந்தது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. சிநேகா பெயரில்

இருந்த உரிமத்தை நான் பார்க்கவில்லை. சிநேகா பெயரில் எந்த தேதியிலிருந்து எந்த தேதி வரை உரிமம் இருந்தது என்று எனக்குத் தெரியாது. அரசு அனுமதியுடன் சிநேகாவின் கணவர் பெயரில் உரிமத்துடன் கல்வெட்டி எடுக்கப்பட்ட விபரம் எனக்குத் தெரியாது. உரிமத்துடன் எவ்வளவு கற்கள் வெட்டி எடுக்கப்பட்டது என்ற விபரம் அலுவலகத்தில் இருக்கும் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. பாறை உடைக்கப்பட்ட பகுதியின் மொத்த பரப்பு தெரியாது. நிலத்தை பார்க்க நான் போகவில்லை என்றால் சரியல்ல. புதிதாக கற்கள் வெட்டி எடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் வருவாய்துறையில் வேலை பார்த்ததால் என்னை பொய்யாக சாட்சியாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 234 /2016**

**Deposition of P.W.** 5

Name : சாமி

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:20**.11.2024**

Accused Present

<u>முதல் விசாரணை</u>–

நான் நிலஅளவை துறையில் அளவையராக வேலை பார்த்து ஓய்வு பெற்று விட்டேன். தற்போது நான் தென்காசி மாவட்டம் கீழபாவூரில் வசித்து வருகிறேன். இதற்கு முன்னர் 13.09.2012ம் தேதி தக்கலை குறுவட்ட சார்ஆய்வாளராக வேலை பார்த்தேன். அப்போது கல்குளம் வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர், புவியியலாளர், ஆகியவர்களுடன் வேளிமலை கிராமம் சர்வே எண்.3/4பி சென்று இடம் பார்வையிட்டோம். கல்பாறை உடைக்கப்பட்டிருந்தது. மேற்படி சர்வே எண்ணில் கல்பாறை உடைக்கப்பட்டிருந்தது என்பது உறுதி படுத்தினோம். போலீசார் என்னை விசாரிக்கவில்லை

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எத்தனை மணிக்கு நிலத்தை பார்வையிட சென்றோம் என்று ஞாபகமில்லை. நாங்கள் பார்வையிட்ட தேதிக்கு முன்னர் எதிரியின்

கணவர் அஜய் பெயரில் உரிமம் இருந்தது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அந்த தேதிக்கு முன்பாக யார், யார் பெயரில் உரிமம் இருந்தது என்று எனக்குத் தெரியாது. நாங்கள் நிலத்தை அளக்கவும் இல்லை அதனால் எங்களுக்கு அதன் விபரம் தெரியாது என்றால் சரியல்ல. நிலத்தை அளந்து சர்வே எண் மட்டும் குறிப்பிட்டு சொன்னேன். பாறையின் அளவு பற்றி நான் எதுவும் கூறவில்லை. நான் சொன்னது போல் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல.